இறக்குமதி செய்யப்பட்ட
ஃ பலவித பரிசுப் பொருட்கள்.
அழகு சாதனப் பொருட்கள், தையல் வேலைகளுக்குரிய சகல பொருட்கள்.
மற்றும்
ஃ யப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல தரங்களிலுமுள்ள காதுகேட்கும் கருவிகள் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
இருபா கிவ்ற் கவுஸ்
KIRUBA GIFT HOUSE
சோதிடவிலாஸ் கட்டிடம்
46, பெரியகடை- யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8083

★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 ஆவணி 8 றம்ழான் 30 இதழ் 193
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 24-8-79

சைவபோசனசாரர் மனதில் என்றும் நிலைத்திருப்பது
தேவி விலாஸ்!!
சுத்தம்- சுவை- சுகாதாரம்- அன்பான உபசரிப்பு! விஜயம் செய்யுங்கள்,
தேவி விலாஸ்
(வண்ணை வெங்கடேசப் பெருமாள் கோவில் சந்தி)
288, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1979-8-24
PERIODICALS DIVISION
LIBRARY

## தேர்தல் சுயேச்சையாக நடக்காதாம்

# சரண்சிங் காபந்து அரசுக்கு இந்திரா காங்கிரஸ் எதிர்ப்பு!

### மாற்று அரசு அமைக்க ஜனாதிபதிக்கு கோரிக்கை

புதுடில்லி, ஆக. 24

லோகசபை கலைக்கப்பட்டதை இந்திரா காங்கிரஸ் கட்சி வரவேற்றுள்ளது. அதேசமயம் சரண்சிங் அமைச்சரவை காபந்து அரசாகப் பதவியில் இருப்பதை அது எதிர்க்கின்றது.

எச்சுடியவிதத்திலும், சர்ச்சையில்லாமலும் நடைபெறுவதற்கு வேறு காபந்து அரசு ஒன்றை அமைக்க வேண்டுமென்று இந்திரா காங்கிரஸ் கருத்து வெளியிட்டுள்ளது.

சரண்சிங் காபந்து அரசுக்

இடைத் தேர்தல்கள் எல்ருப் பதிலாக அமையும் புதிய லாரசலும் ஏற்றுக்கொள் காபந்து அரசுக்கு திரு. ஜெக

ஜீவன்ராம் பிரதமராக இருப்பதாலும் தங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான திரு ஸ்டீபன் கூறியிருக்கிறார்.

லோகசபையில் நம்பிக்கை வாக்கைப் பெறாத ஒருவர் காபந்து பிரதமராகப் பதவியில் இருப்பதற்கு அரசியல் சட்டத்தில் இடமில்லையென்று அவர் கூறியிருக்கிறார்.

சரண்சிங் காபந்து அரசுக்குப் பதிலாக புதிய காபந்து அரசொன்றை நிறுவும்படி கோருவதற்காக இந்திரா காங்கிரஸ்கட்சித் தலைவர்கள் நாளை ஜனாதிபதியைச் சந்திக்கவிருக்கிறார்கள்.

இதேசமயம் ஜனதா கட்சித் தலைவர்கள் பெரிய எதிர்ப்பில் நடத்திய ஒரு கூட்டத்தில் ஜனாதிபதியின் நடவடிக்கைகளைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார்கள்.

திரு. சஞ்சீவரெட்டி பதவியிலிருந்து விலகவேண்டுமென அவர்கள் வற்புறுத்தினார்கள். இந்தக் கூட்டத்தில் திரு. ஜெகஜீவன்ராம் பேசுகையில் முன்பு திரு சஞ்சீவரெட்டிக்கும் திரு. வி. வி. கிரிக்கும் இடையில் ஜனாதிபதி பதவிக்காக நடைபெற்ற தேர்தல் போட்டியின்போது கிரிக்கு ஆதரவாகப் பேசிவந்ததை திரு. சஞ்சீவரெட்டி இன்னமும் மன்னிக்கவில்லை என்பதை அவரது இப்போதைய நடவடிக்கை காட்டுகிறது என்றார்.

### கருணாநிதி கருத்து

ஜனாதிபதியை ஜனதா கட்சி கண்டிக்க எடுக்கும் முயற்சி ஏனைய நாடுகளின் முன்னால் இந்தியாவின் மதிப்பைக் குறைக்கும் முயற்சியாகும் என்று முன்னாள் தமிழ்நாடு முதல்வர் திரு மு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

திரு மொரார்ஜி தேசாய் பிரதமர் பதவியிலிருந்து விலகியவுடனேயே ஜனதா கட்சித் தலைவர் பதவியையும் கைவிட்டிருந்தால் திரு ஜெகஜீவன்ராம் பிரதமராக வரக்கூடிய வாய்ப்பு இருந்தது. அதைத் தவறவிட்டுவிட்டு இப்போது ஜனாதிபதியைப் பதவியிலிருந்து இறக்க முனைவது சரியல்ல என்று திரு கருணாநிதி கூறினார்.

எதிர்வரும் தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளுடன் உடன்பாடு செய்து கொள்ள தமது கட்சி விரும்புவதாக பிரதம மந்திரி திரு. சரண்சிங் கூறியிருக்கிறார்.

## இந்திய பிரதமருக்கு எதிராக 'சோ' வழக்கு

சென்னை, ஆக. 23

எந்தச் சட்டத்தின் கீழ் பதவியிலிருக்கத் தமக்கு அதிகாரம் இருக்கிறதென்பதை விளக்கம் தரும்படி திரு. சரண்சிங்கிற்கு உத்தரவிட வேண்டுமென்று சென்னை மேல்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரபல சென்னை வழக்கறிஞரும், எழுத்தாளரும், நடிகருமான ராமசாமி (சோ) இவ்வழக்கைத் தாக்கல்செய்துள்ளார்.

அரசியல் சட்டத்தின் 236வது ஷரத்தின் கீழ் பிரதமமந்திரிக்கு இந்த உத்தரவை நீதிமன்றம் விடுக்கமுடியும் என்று திரு ராமசாமி தம் மனுவில் கூறியுள்ளார்.

யாழ். நகர் இளைஞர்களே!
உமக்கு இனியதோர் இலவச
இசை விருந்து
யாழ். வீரசிங்கம்மண்டபம்
சனிக்கிழமை 25-8-79 மாலை 6 மணி
இடத்துக்கு முந்துங்கள்.
THIS IS AN AGAPE FORCE PRESENTATION OF
"MY BROTHER'S KEEPER" IN CONCERT
வாலிபனே! நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை.
3375

திருமாங்கல்ய அழைப்பு
கனகலிங்கம் திலகவதி
அன்புடையீர்,
எமது புதல்வி திருநிறை செல்வி திலகவதி அவர்களுக்கும், நயினை நா. சரவணமுத்து தம்பதிகளின் புதல்வன் திருநிறை செல்வன் கனகலிங்கம் அவர்களுக்கும் எதிர்வரும் 27-8-79 திங்கட்கிழமை இரவு 11-00 மணி முதல் 12-15 மணிவரையுள்ள சுபவேளையில் நிகழும் திருமண வைபவத்தில் தாங்களும் கலந்து கொண்டு மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஆ. சி. நடராசாவும்,
(நியூஸ் ஏஜண்ட், யாழ் பஸ்நிலையம்)
பாரியாரும்,
சகோதரர்களும்,
துணைவியர்களும்.
7, ஒஸ்மானியாக் கல்லூரிவீதி,
யாழ்ப்பாணம்
3389

## தெல்லிப்பழை துர்க்காதேவி இன்று கொடியேற்றம்

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இதனைத் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் உற்சவம் நடைபெறும்.

இரதோற்சவம் அடுத்த மாதம் 3ந்திகதி திங்கட்கிழமை காலை 9-45 மணிக்கு நடைபெறும்.

கொடியேற்ற விழா நிகழ்ச்சி நேர அட்டவணை வருமாறு; காலை 6 மணி அபிஷேகம், 7-30 மணி பூசை, 8-30 வசந்த மண்டபபூசை, 9-30 கொடியேற்றக் கிரியைகள், 10-00 கொடியேற்றம்! 11-00 அம்பாள் உள்வீதி உலா, 12-30 அன்னதானம்.

தினமும் மாலை நிகழ்ச்சிகள்; பிற்பகல் 5-30 திருமுறைப் பண்ணிசை; 6-00 பூசை 6-30 வசந்தபூசை, இரவு 7-15 அபிராமி அந்தாதி நர்த்தனை, 7-30 வசந்த மண்டபப்பூசை, 8-00 அம்பாள் வீதிஉலா, 10-15 அர்த்தசாமப்பூசை. [செ]

## துப்பாக்கி வெடித்து கான்ஸ்டபிள் காயம்!

[யாழ்ப்பாணம்]

வங்கியில் காவலுக்கு இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் துப்பாக்கி வெடிக் காயத்திற்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கியின் பிரதான வாயிலில் மானிப்பாயைச் சேர்ந்த றிசேவ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆனந்தகுமாரசாமி காவலில் இருக்கையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

இலங்கை வங்கியில் வெடிவிபத்துக்குள்ளான கான்ஸ்டபிளும் மற்றும் ஆறு கான்ஸ்டபிள்களும் நேற்று வியாழக்கிழமை காவலுக்கு இருந்தார்கள். ஆனந்தகுமாரசாமி பிரதான வாயிலில் காவலுக்கு இருந்தார் துப்பாக்கியில் தோட்டா நிரப்பப்பட்டிருந்தது துப்பாக்கி தற்செயலாகத் தட்டுப்பட்டு வெடித்ததென்று விசாரணையில் தெரியவந்தது றிசேவ் பொலிஸ் கான்ஸ்டபிளின் இரு கைகளிலும் காயமேற்பட்டுள்ளது. [செ]

திருமண அழைப்பு
மணமகன் செல்வன் மணமகள் செல்வி
திரு ச.ஹரிஹரன்-பா.ஹேமமாலினி
தினம்: ஞாயிற்றுக்கிழமை (26-8-79)
நேரம்: இரவு 6 மணி தொடக்கம் 7-15 வரை
இடம்: "சுபாஸ் இல்லம்,"
37, விக்டோறியா றோட்,
யாழ்ப்பாணம்.
உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திரு. திருமதி A.சங்கரன்
37, விக்டோறியா றோட்,
யாழ்ப்பாணம்,
திரு. V.பாஸ்கரன்நாயர்
'ஹரிமல் நிவாசா'
57, சேர்ச் றோட்,
வத்தளை
3385

## வரி விளம்பரம்

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீனமுறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்ரிக் வயறிங் ரேடியோ (Transistor) Building Tec no-logy P. M. G Certificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57, மார்சோல் வீதி, யாழ்ப்பாணம். 3369

### விற்பனைக்கு

தட்சிணாமூர்த்தி தந்துவமும் தோத்திரமும் (குருமாந்தம்) என்ற சிறந்த நூலைப்பெற விரும்புவோர் 10 மில்லைவற் நீலசேப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள். மில்க்வைற்— யாழ்ப்பாணம் 3381

ஆ. வ. சதாசிவம் சட்டத்தரணியும் நொத்தாரிசும் காங்கேசந்துறை:

### முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழை, காலஞ்சென்ற சிற்றம்பலம் மகன் திருஞானசுந்தரம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்.

கதிரவேலு நவரத்தினம் பனை, தெல்லிப்பழை

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் 35 T

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1979ம் ஆண்டு ஆனி மாதம் 28ம் நாளன்று அதில், அதற்கிணங்க முதலிலேயே முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது. 1979ம் ஆண்டு ஆனி மாதம் 28ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
மு. நல்லலிங்கம்
பதிவாளர்

தயாரித்தது:
ஆ. வ. சதாசிவம்
மனுதாரின் பதிவுபெற்ற சட்டத்தரணி. 3352

### விற்பனைக்கு

தொழில் நுட்பக் கல்லூரிக்கு அருகில் பிறவுன் வீதியில் மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு உளது. விரும்புவோர் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல, 3372, C/o ஈழநாடு லிமிட் யாழ்ப்பாணம். 3372

## முஸ்லிம் வட்டாரத்தில் சுகாதார நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் புனித ரம்ழான் பெருநாளை முன்னிட்டு யாழ். மாநகரசபை பல சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண் 18ம் பக்கம் பார்க்க)

நாடக, அரங்கக் கல்லூரி
ரசிகர் அவைக்காகத்
தயாரித்தளிக்கும்
அ. தாசீசியசின்



## "பொறுத்தது போதும்"

26-8-79 ஞாயிறு மாலை 6-45 மணிக்கு
வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்
பிரவேசம்: ரூபா 5, 3, 2
இலவசம்: ரசிகர் அவை உறுப்பினர்களுக்கு
ரசிகர் அவையில் உறுப்பினராகி பயன் பெறுங்கள்.
3371

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)

## கட்டிடத்திற்கான கேள்வி விண்ணப்பம் கோரல்

எமது 30-7-'79 வீரகேசரி விளம்பரம் தொடர்பான பின்குறித்த கேள்வி விண்ணப்ப முடிவு திகதி 4-9-'79 என்பதை அறியத்தருகின்றேன்.

விபரம்

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மூன்று மாடிக் கட்டிடத்தின் நிலத்தளம் கட்டுவதற்கு மேற்படி சங்கப் பொதுமுகாமையாளரால் ரூபா ஒரு லட்சத்திற்கு மேல் (ரூபா 100,000/-) அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் இரு பகுதியாக கோரப்படல் வேண்டும்.

1. பொருட்களும் கூலியும் உட்பட
2. கூலி மாத்திரம்

கேள்விப்பத்திரங்கள் 31-8-'79-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி வரை கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 100/- கட்டி தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். மீளளிப்பு கேள்விப்பத்திரப் பிணைப்பணமாக ரூபா 250/- செலுத்தப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் இடதுபக்க மேல் மூலையில் "கட்டிடத்திற்கான கேள்வி விண்ணப்பம்" என எழுதப்பட்டு 4-9-'79 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னராக நேரிலோ அல்லது பதிவு செய்யப்பட்ட தபாலிலோ அனுப்பப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்களை தலைமைக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.

74/3, அக்கிராட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்,
22-8-79. 3382

## திருமண அழைப்பு

மணமகன்: திருநிறை செல்வன் கணேசநாதன் அவர்கள் (நிர்மாண அத்தியட்சகர், அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனம், மட்டக்களப்பு)
மணமகள்: திருநிறைசெல்வி சுபாதேவி
சுபநேரம்: 26-8-79 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-45 முதல் 12-15 வரை
மண்டபம்: மணமகள் இல்லம் ஊரெழு
அழைப்பு: மேற்படி வைபவத்திற்கு வருகை தந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகன் பெற்றோர்
ச. வல்லிபுரநாதரும் குடும்பத்தினரும்
சிவசக்தி வாசா,
நாகர்கோவில்.

மணமகள் பெற்றோர்
மு. வீரசிங்கமும் குடும்பத்தினரும்
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
3383

## வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு?

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு தேடுவோருக்கான
குறுகிய கால (மூன்று மாத)
டிப்ளோமா வகுப்புக்கள் தொலைக்காட்சி
(Television)
குளிரூட்டலும் குளிர்சாதனம் பொருத்தலும்
(Air Condition & Refrigeration)
Spoken English
ஆங்கிலப் பேச்சு பயிற்சி ஆரம்பம் முதல்
விண்ணப்ப முடிவு திகதி 31-8-79
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனம்,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7715 3378

## பிஸ்கால் பகிரங்க ஏல விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற வி. பொ. அப்பாத்துரை சண்முகநாதன் என்பவரின் மரணசாதனமில்லாத சொத்துக்கள் விடயத்தில்.

மரணமெய்தியவர்

வழக்கு இலக்கம்; நந்துவம் 3251

திருமதி மகேஸ்வரி சண்முகநாதன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

எதிராக மனுதார்

1. இராமநாதன் சத்தியநாதன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
2. மேர்க்கன்ரைல் கிறடிட் லிமிட்டெட்,
51—53, குயின்ஸ் வீதி, கொழும்பு 1.

இடைபுகு மனுதாரர்கள்

மேற்படி இலக்க வழக்கில் உள்ள மரணமெய்தியவராகிய கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த வி. பொ. அப்பாத்துரை சண்முகநாதனின் அசைவற்ற சொத்தான 24 ஸ்ரீ 6277ம் இலக்க முடைய "இசுசு" லொறியை ரூபா 70,000/-க்கு குறையாமல் விற்பனைசெய்யும்படி மேற்படி நீதிமன்ற தீர்ப்பு வழங்கியிருப்பதால் குறித்த லொறியை 1979ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ம் திகதி புதன்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற வழவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

லொறியை பார்வையிடுவோர் கோண்டாவில், டேலி வீதி, "நோதன் டீசல் இன்ஜினியேஸ்" கராச்சில் பார்வையிடலாம் அல்லது 11-9-79ல் இருந்து யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற வழவில் பார்வையிடலாம்.

லொறியை வாங்குவோர் முழுப்பணத்தையும் ரொக்கமாய் செலுத்தி வாகனத்தை பொறுப்பேற்று மாவட்ட நீதிமன்ற வழவிலிருந்து உடனடியாக அப்புறப்படுத்தப்படவேண்டும்.

பொ. பாக்கியநாதன்
பிஸ்கால்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
23-08-79. 3380

வடமாகாண மின்தறி கைத்தறி உற்பத்தியாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

## கொழும்பு 274 நிர். செட்டியார்தெரு 'ஏசியன் கொம்பனி' ஸ்தாபனத்தார்

தங்கள் கிளை நிறுவனமாக யாழ்.நகரில் 212, காங்கேசன்துறை வீதியில் (S. R. S. ஜவுளிமாளிகை நெசவுநிலையம் அருகாமையில்)

## இன்று 24-8-79 தொடக்கம்

தங்கள் சேவையை ஆரம்பிக்கின்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

★ கைத்தறி நூல்வகைகள் ★ நெசவு தொழில் உபகரணங்கள்
★ நூல் சாயங்கள் ★ இரசாயனப் பொருட்கள்

மற்றும் ஏனைய உபகரணங்களும்

கொழும்புசெல்லாமலே இலகுவில் குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

# ஏசியன் என்ரபிறைசஸ்

212, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 296

3379

# இந்திரா தான் — இந்தியாவா?

இந்திராகாந்திக்கு எதிராக அணிதிரண்டு கூட்டணி அமைத்த ஜனதாக் கட்சி தேர்தலில் பெருவெற்றிபெற்று பதவியிலிருந்த பிரதமரையே தோற்கடித்து இந்திய லோகசபையில் மிகப் பெரும்பான்மைக் கட்சியாக விளங்கியது முது பெரும் தலைவர் ஜெயப்பிரகாசரும் ஜனதாவின் வெற்றிக்கு மூலகாரணராக விளங்கினர்.

பாரதப் பிரதமராக மொரார்ஜிதேசாய் பதவியேற்று இரண்டாண்டுகாலத்தில் நாட்டில் மதப்பூசல்களும் சாதிச்சண்டைகளும் வெடித்தன. சுதந்திரச் சிற்பிகளாக விளங்கிய பெருந்தலைவர்களால் அமைக்கப்பட்ட அரசு என்றும் எதிலும் இந்திரா சஞ்சய் என்று அலட்டிக்கொண்டதே தவிர அவர்களை அரசியல் அரங்கிலிருந்து அடித்துத் துரத்த எத்தனித்ததே அன்றி நாட்டுக்கு உருப்படியாக எதையும் செய்யவில்லை என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

"கமிசத்தின் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளித்த திருமதி இந்திராகாந்தி. அரசியல்துறையிலும் பொருளாதாரத்துறையிலும் நாடு இன்று அனுபவித்துவரும் கஷ்டங்களுக்கு மொரார்ஜி அரசே காரணமாகும்" என்றார்.

இந்திரா, சஞ்சய்காந்தி எல்லோரை விசாரித்து நீதி வழங்க விசேட நீதிமன்றங்களை ஏற்படுத்தியதும் இந்திரா ஆதரவாளர்கள் இதனைப் பலமாக எதிர்த்தார்கள்.

எப்படியாகுலும் மொரார்ஜி அரசைக் கவிழ்க்கவேண்டுமென்று எண்ணிய இந்திரா, அவரின் முன்னைய சகாவான வை. பி. சவானின் நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை ஆதரிக்க முன்வந்தார். ஜனதாவில் ஏற்பட்ட கட்சிமாறல் நடவடிக்கையால் மதசார்பற்ற ஜனதா கட்சி உருவானது.

## சரண்சிங் அரசு

கடந்த ஜுலை மாதம் 26ம் திகதி இந்திய ஜனாதிபதி, சௌத்திரி சரண்சிங்கை அழைத்து அரசொன்றை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார். மொரார்ஜியின் ராஜினாமாவைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவராக இருந்த வை. பி சவானை அரசாங்கத்தை அமைக்குமாறு கேட்டுக்கொண்டபோதும் அவரால் நிலையான ஒரு அரசை அமைக்கமுடியாமல்போய்விட்டது. அதன்பின்னர் சௌத்திரி சரண் அழைக்கப்பட்டு பல கட்சிகளின் ஒத்துழைப்புடன் மந்திரிசபையை அவர் அமைத்தார். இம் மந்திரிசபையில் மொத்தம் 38 மந்திரிகளும் 29 இராஜாங்க மந்திரிகளும் அங்கம்வகித்தனர். ஆரம்பத்தில் சரண்சிங்கிற்கு ஆதரவு தருவதாகக் குறிப்பிட்ட இந்திராகாங்கிரசார் கடந்த 19-8 79ல் ஆதரவு தரவும் முடியாது, நடுநிலை வகிக்கவும் முடியாது, நம்பிக்கைத்தீர்மானத்தை எதிர்த்து 20ம் திகதி வாக்களிப்போமெனச் சொல்லிவிட்டனர். இதன்காரணமாக 24 நாட்களை ஆயுளாகக் கொண்ட சரண்சிங் அரசு 20ம் திகதி ராஜிநாமாசெய்ய வேண்டியேற்பட்டுவிட்டது.

## காங்கிரஸ் ஒற்றுமை

இவரது மந்திரிசபையில் அங்கம்வகித்த உத்தியோகபூர்வகாங்கிரஸ் கடந்த 18ம் திகதி காங்கிரசில் ஒற்றுமையை ஏற்படுத்தவேண்டி சிலமந்திரிகளின் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டது. உத்தியோகபூர்வ காங்கிரசிற்கு 1 மந்திரிப் பதவிகளும் 17 ராசாங்க மந்திரிப் பதவிகளும் கொடுக்கப்பட்டன. அவர்களில் 7 மந்திரிகளும் 12 இராசாங்க மந்திரிகளும் தமது தலைவரான வை. பி. சவானிடம் ராஜினாமாவை சமர்ப்பித்தனர். உத்தியோகபூர்வ காங்கிரசின் மிக முக்கியஸ்தரான வி. பி. நாயக் சிங்கப்பூர் சென்றிருந்தபோது திடீரெனக் காலமாகிவிட்டார்.

## அரசாங்கம் அமைக்க...

மந்தியில் 544 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். இன்றையநிலையில் சில கட்சிகளின் ஆதரவின்றியே ஜெகஜீவன்ராமின் ஜனதாவுக்கு 215 உறுப்பினர்

## புத்தொளி

கள் இருக்கிறார்கள். இந்திரா காங்கிரஸ் ஆதரவை ஜெகஜீவன்ராம் பெற்றால் அவருக்கு 286 பேரின் ஆதரவு மந்தியில் இருக்கின்றது. இன்றையநிலையில் ஒரு அரசாங்கம் அமைக்க 238 வாக்குகளே போதுமானது, இதுதான் இன்றைய இந்தியா!

இப்படியான இழுபறியில் மூதறிஞர் ராஜாஜி சொன்னதை நினைவு கூருவது பொருத்தமாக இருக்கும் "கட்சி வேறு அரசாங்கம் வேறு கட்சிக்காரரின் கவலைகள் அன்றாட அரசாங்கப்பணியில் கலந்து விடுமானால், மக்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய நல்ல ஆட்சி பறிபோய்விடும்" என்று கூறியுள்ளார்.

கட்சிக்காரரின் கவலைகள் ஆட்சியில் குறுக்கிட்டதால் இன்று ஒன்றன்பின் ஒன்றாக இந்தியப் பிரதமர்கள் ராஜினாமா செய்து வருகின்றார்கள்.



## மக்கள் என்ன கருதுகின்றார்கள்?

இழந்த பாராளுமன்ற ஸ்தானத்தையும், பாரதப் பிரதமர் பதவியையும் இன்று இந்திராவால் பெறமுடியுமென்று பாரத மக்கள் கருதுகிறார்கள்

ரயரேலி தொகுதியில் தோற்றுவிட்ட இந்திரா; சிக்மகளூர் தொகுதியில் அமோக வெற்றிபெற்றதும், சரண்சிங்கை தற்போது ராஜினாமா செய்யவைத்ததும்; ஜெகஜீவன்ராமை ஆதரித்தால் அவரால் ஆட்சியமைக்க முடியுமென்பதை மெய்ப்பித்தன் வதுமான நிலைமைகள் இன்று இந்திராவின் சக்தியை வெளிப்படுத்தியுள்ளது.

21 மாதகால அவசரகால நிலையில் மக்கள் அல்லற்பட்டார்களென்றும், தலைவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டார்களென்றும் ஜனதா பிரசாரம் செய்து இந்திராவைத் தோற்கடித்தபின், நாட்டுநிலைமை மாறியுள்ளது. இரண்டாண்டுகளாக மக்கள் பட்ட துயரம் 21 மாதகால அவசர நிலையை விட மோசமானதென்று கருதப்படுகின்றது.

## ஜெகஜீவன்ராம் நிலைமை

ஜெகஜீவன்ராம் கட்சியில் இருக்கும் 100 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஜனசங், ஜெகஜீவன்ராம் அரசில் பதவிபெறுவதை இந்திரா காங்கிரஸ் விரும்பவில்லை என்பதை அதன் பாராளுமன்றக் குழுத்தலைவர் 20-8-79 அன்று எடுத்துக்காட்டியுள்ளார். 1982-ல் நடக்க வேண்டிய தேர்தல் இவ்வருடம் நடைபெறப் போகிறது.

## இந்திராவின் தீர்க்கதரிசனம்

"எந்தக் கட்சி மாற்று அரசாங்கம் அமைந்தாலும் அந்த ஆட்சி நீண்டநாள் நீடிக்கப் போவதில்லை. மாற்று அரசாங்கம் அமைந்தாலும் சரி அமைக்காமல் விட்டாலும் சரி இடைக்காலத் தேர்தல் வருவது வெகுதூரத்தில் இல்லை என்று இந்திரா கூறியிருப்பதிலிருந்தும் 19-8-79 அன்று பம்பாயில் பேசிய இந்திரா, "கட்சி அங்கத்தவர்கள் இடைக்காலப் பொதுத் தேர்தலுக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும் அத்துடன் நாட்டிற்கு ஸ்திரமான அரசாங்க மொன்றை அதிகாரத்தில் அமர்த்தவேண்டும்" என்றும் அறிவுறுத்தியுள்ளார். அத்துடன் கட்சித்தலைவர்களின் சமீபத்திய போக்கையும் அவர் வன்மையாகச் சாடியுள்ளார் "ஒவ்வொரு கட்சியினரும் எம்மைத் தீண்டாதார் என்று எண்ணுகின்றனர். எனது தலைமையைக் கண்டித்து என்னைச் சர்வாதிகாரி எனக் கூறியவர்களே எனது ஆதரவைக் கோரி இப்பொழுது பின்கதவால் என்னைச் சந்திக்கின்றனர். எனது ஆதரவில்லாமல் அவர்களால் இன்றைய அரசியலில் உயிர்பிழைக்க முடியவே முடியாது."

அப்படியானால் இந்திரா காந்திதான் இந்தியாவா? டிசம்பர்வரை பொறுத்திருந்து பார்ப்போம்.

---

## மக்கள் கருத்து!

### மூளாய் வைத்தியசாலை

சென்ற சில ஆண்டுகளாக சீர்குலைந்து இருந்த மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை, அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டு, மீண்டும் உன்னத நிலையை அடைந்து மக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் சேவை ஆற்றிவருவதை யாவரும் அறிவார்கள்; குறிப்பாக விசேட நிபுணத்துவம் பெற்ற வைத்திய கலாநிதிகளை வரவழைத்து, நோயாளிகளுக்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுத்து சேவை செய்யும் தற்போதைய இயக்குநர் சபையை பாராட்டாமல் இருக்க முடியாது. அண்மைக் காலத்தில் வைத்தியசாலை நோயாளர்களால் நிரம்பி வழிவதைக் காணக் கூடியதாயுள்ளது இவ்வேளையில் ஒருகுறை இருப்பதையும் உணரமுடிகிறது.

சேமிப்பில் இருந்த வைப்புப் பணமும் முழுவதையும் அழித்து கட்டிடங்கள் சீர்திருத்தம் செய்யாமலும், தேவையான உபகரணங்கள் வாங்கப் பணம் இல்லாமையால் வைத்தியசாலை ஒரு இக்கட்டான நிலையில் இருப்பதை அறிந்து, இந்த குறையை நிவர்த்தி செய்தால் மேலே சொன்ன சேவைகளை நாம் தொடர்ந்தும் பெற்றுக் கொள்ளலாம் என்ற ஆவா தோன்றி இதற்கு எல்லோரும் உதவி செய்ய வேண்டும் என்ற கருத்து பரவலாகத் தோன்றியிருப்பதை காணக் கூடியதாக இருக்கிறது. இதுதுளி பெருவெள்ளம் என்ற முதுமொழிக்கிணங்க குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டு மக்களும், தர்மசீலர்களும் இந்த நல்ல செயலை செய்ய முன்வரவேண்டும். கட்டிட வேலைகள், தண்ணீர் தாங்கி அவசர உபகரணங்கள் முதலியவற்றுக்கு ரூபா 75,000 தேவை என அறியப்படுகிறது.

தன்கையே தனக்கு உதவி என்ற முறையில் ஆரம்பகட்டமாக, சிரமதான இயக்கம் வைத்தியசாலை இயக்குநர் சபையின் திட்டப்படி, இம்மாதம் 26-ம் திகதி காலை 7 மணிக்கு வட்டுக்கோட்டை எம் பி திரு. தா. திருநாவுக்கரசுவால் ஆரம்பித்து வைக்கப்படும் என்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியாகவுள்ளது. இதில் குறிப்பாக இளைஞர்களும், தொழில் நுட்பம் பெற்றவர்களும், முன்னாள் இயக்குனர்சபை உறுப்பினர்களும் மற்றும் அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் பங்கு பற்றுவார்கள் என்பதில் ஐயம் இல்லை. அன்றையதினம் நூற்றுக்கும் அதிகமான பலவகையான மரநடுகையும் திட்டமிட்டு இருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும் இப்படியான சிரமதான வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்று வைத்தியசாலையை முன்னேற்ற வேண்டும்.

ச. குலசூரியன்
முன்னாள் இயக்குநர்சபை உறுப்பினர்,
சித்தன்கேணி.

---

## சம்பள உயர்வு 75 ரூபா

(கொழும்பு)

அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களுக்கு எழுபத்தி ஐந்து ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவிருக்கிறது.

அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து 75 ரூபா சம்பள உயர்வை வழங்குவதற்கு அரசு முடிவு செய்திருந்தது உணவு முத்திரை சம்பளத்திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம் என எதிர்பார்ப்பதால் செப்ரம்பர் மாதத்திலிருந்து 50 ரூபா அலவன்ஸ் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதைவிட 25 ரூபாவை பட்ஜெட்டிற்குப் பின்னர் ஜனவரி முதல் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது

அரச ஊழியர்களின் சம்பளம் பற்றி ஆராய்வதற்காக முன்னாள் பிரதம நீதியரசர் திரு. விக்டர் தென்னக்கோன் தலைமையில் நியமிக்கப்பட்டிருந்த கமிட்டி வழங்கியிருக்கும் ஆலோசனையின் பேரிலேயே மேற்படி சம்பள உயர்வு வழங்கப்படுகிறது. [கு]

---

## "அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு

# 500 ரூபா சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கவும்

## சிறிலங்கா அ. உ. சங்கம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் திட்டமிடல் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்க தகுதிஉடையவர்களாக்க நடவடிக்கை எடுக்கும்படி தாய்ச்சங்கத்தைக் கோரும்-முக்கிய தீர்மானம் ஒன்று ஸ்ரீலங்கா அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்க யாழ் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

வருடாந்த பொதுக்கூட்டம் யாழ்' வை எம். சி. ஏ. மண்டபத்தில் திரு. தி. துரைச்செல்வம் தலைமையில் நடைபெற்றது. சபையில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

"சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் மாதச்சம்பளமாக ரூபா 500 வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தாய்ச்சங்கத்தைக் கோருதல்

"அபிவிருத்தி உத்தியோகத்தர்க்கு அங்கீகரிக்கப்பட்ட கடமைப் பட்டியல் வழங்கப்படல்வேண்டும்.

"சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் சுற்றுநிருபத்திற்கிணங்க பிரயாணப்படி வழங்கப்படவேண்டும்.

"இடமாற்றங்கள் செய்யப்படும்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் கூடியகாலம் பணிபுரிந்தவர்கள் என்ற அடிப்படையில் அமைய வேண்டும் என்று இடமாற்றச்சபையைக் கோருதல்.

அரச அதிபராக, திரு யோகேந்திராதுரைசுவாமியை நியமித்தமையை பாராட்டுதல்.

புதிய ஆண்டுக்கான நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. இ. யோகேந்திரநாதன், உபதலைவர்; திரு சி. குணசிங்கம், செயலாளர் திரு. இ பாலேந்திரன், உபசெயலாளர் திரு எஸ். சிவபாதசுந்தரம், பொருளாளர்; திரு. தி சரவணபவசதாசிவம்"

(கொ-கு)

---

## வல்வையில் நவீன பஸ் நிலையம்

[நெல்லியடி]

வல்வெட்டித்துறையில் நவீன பஸ்நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது, வட்டைக்காரிகள் நிறுத்துமிடத்தில் இந் நவீன பஸ்நிலையம் அமைக்கப்படும். இதற்கான தீர்மானமொன்று வல்வெட்டித்துறை நகரசபையில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

திரு எஸ் ஞானமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில் இத்தீர்மானத்துடன் பிறிதொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தின்படி பொலிகண்டியில் நூல்நிலையமொன்று அமைக்கப்படும். இந்நூல்நிலையத்தினை அமைக்க சுமார் 10,000 ரூபா செலவிடப்படும்.

தின்னே சந்திப்பவர்க் கெளிதாம்
எம்பிராட்டி தண்ணளியே.
எந்நேரமும் சுவைமிகு குளிர் பானங்கள்
அருந்தி மகிழ்ந்திட

இந்திரபவன் கூல் பார்

உரிமையாளர் : எஸ். சுந்தரம்
இல, 1 & 2, கே. கே. எஸ் வீதி,
சுன்னுகம்.

மங்களம் பெருகவும், மங்கலம் பொலியவும்
உன்னடியார்களை வாழவைப்பாய்
என்றே வேண்டி நிற்கின்றோம்.

குஷிபா (டிஸ்றிபியூட்டர்ஸ்) லிமிட்.

மாவிட்டபுரம் (கிளை - 2)

குஷிபா குரூப் கொம்பனிகளின்
தயாரிப்புக்கள், மொலர் பிராஸ்ட்
அலுமினியப் பொருட்கள், மற்றும்
தயாரிப்புக்கள் விநியோகஸ்தர்கள்.

ஓங்கார விந்திலே
எங்கள் துர்க்கை அம்மா
ஒளி வீசும் முழுமதியே
எங்கள் துர்க்கை அம்மா

சகலவிதமான அழகுசாதனப் பொருட்கள், விளையாட்டுச் சாமான்கள், நூல் வகைகள், சமையல் சாமான்கள், அலுமினியப் பொருட்கள் அனைத்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

அம்பிகாபதி ரெக்ஸ்ரைல்ஸ்

66, பெரியகடை, யாழ்ப்பாணம்.

இந்நாடெங்கும்
துர்க்கை அருள் பொலிவதாக !
யாழ். நகரில் சுத்த, சைவ
உணவு வகைகளுக்கு

★ V. S. S. K. ★

57, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

அருள்மிகு துர்க்கை அம்பாளுக்கு
கொடியேற்றம் நடைபெறும் இந்நாளில்
எமது மனப்பூர்வமான வணக்கத்தைச்
செலுத்தி நிற்கிறோம்

வண்ணத் துணியுடுத்து
வளமார் வகைபண்ணித்துக்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க
ஏற்றதோர் எழிற்கூடம்

கணேசன் ஸ்ரோர்ஸ்

63, 78 கே.கே.எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7169, 8025

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆ...

## அன்னையின் திரு...
## அமைதியும் ஆனந்தமு...

இன்று கொடியேற்றத்துடன் துர்க்கையம்மாள் மகோற்சவம் ஆரம்பம். காலை பத்து மணிக்கு கொடியேற்றவிழா நடைபெற இருக்கிறது. தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் உற்சவம் நடைபெற்று ஆவணி ஓணத்தோடு திருவிழா நிறைவுறும். "அன்னையே எனபேன்! ஓடி வந்தே" என்று அபிராமிப் பட்டர் பாடுவதுபோன்று இன்று அடியார்கள் ஆயிரக்கணக்காக ஓடி ஓடி நாடி வரும் ஆலயம் இதுவாகும். அம்பாளைத் தரிசிக்கும் பொழுது அழுது கண்ணீர் சோரியாதவர்கள் எவருமிருக்க மாட்டார்கள். தன்னை நாடி வரும் அடியவர்களுக்குக் கண்ணீர் துடைத்துக் கருணை பாலிக்கின்றுள் தேவி. செல்வாய்க்கிழமைகளில் தங்களையே மறந்து அம்பாளை நினைந்து வாழ்பவர் பலர்; இதனால் அனுக்கிரகம் பெற்றவர்களும் பலர்.

சமீபத்தில் ஏற்பட்ட இவ்வாலய வளர்ச்சி மிகவும் அற்புதமானது. மாதந்தோறும் பூரணை தினங்களில் இங்கு ஸ்ரீ சக்கரபூஜை நடைபெற்று வருகிறது. காமிய வழிபாடுதான் இங்கு மிக மிக அதிகம். ஆனால் துர்க்கா தேவியும் ஒவ்வொருவர் நோக்... பலமூவந்து ... நனர. இவ்வா... ஒழுகிலும் பக்திப்பரவசவா... கள் இடம்பெறு... லும் போற்... யாக நிகழ்கின்... இவற்றுக்கெல்... வின் திருவ... கமே காரண... துளது என... அசையாத நம்ப... வாகிடு ம... தங்க விக்கிரகம...

## துர்க்கையின் திருவருளும் பக்தரின் பரவசமும்

**திரு. நம. சிவப்பிரகாசம்**
(உபதலைவர், துர்க்கை தேவி ஆலய பரிபாலனசபை)

முறநிகின்பம் சேர முன்னைத்தவ இப்பிறவி
நிந்நிலனின் நல்லூனால் நேர்ந்ததச்-சித்திபெறக்
கண்ணுதற் றெய் வீசன் கருணை கடாட்சமாய்
நண்ணிய மேல் வேதநந் நான்குடனே-அண்ணலார்
தந்த சிவாகமங்கள் சாத்திரங்கள் தோத்திரங்கள்
சிந்தை நிறை வைக்கும் செம்மையிலே-வந்த
இவ சமயத் தோர் தம் நிறைனவில் வாய்ந்த
தலைமுறை சரியை கிரியை-நலமாகத்
தொண்டிவற்றும் அய்மை தலைகுகின்ற
தெல்லிநகரம்
பண்டிவங்கும் துர்க்கை பராசக்தி-கொண்டதிருக்
கோயில் அடியார்கள் குடிபுகட்டும் சேர்ந்திருக்கத்
தாபிவவர்தாம் தர்சனிணம் தாங்குகின்றுள்-
-ஆயிரம்
ஆயிரமாய்ச் சேயிழையார் ஆண்டவைபோர்
அக்கிறாக்கள்
ஆகநேர் கண்களித் தானந்தம்-பாவமெல்லாம்
ஆற்றலெலாம் அன்னை துர்க்கை ஆக்கிவதும்-ஆலயமோ
பொற்றலவின் பான்மை பொலிந்தவருட்-பேற்றினைச்
சாந்தமொழி வாமதிமேம் தாரணியிற் சைவநெறிக்
கேற்றதலம் இங்குண்டென் றேசொல்லி-ஆற்றுப்
படுத்துவதே பத்தர் பணியாகும் பண்பின்
எடுத்துக் காட்டாக இறைவி தொடுத்தலம்
நாழிகைக்கோர் தோற்றமும் நாளுக்கோர் ஏற்றமுமாய்
ஏழிசையின் இன்பமென வோங்க-வாழியவே
துர்க்கை துணையடிகள் சூழுகின்ற மானுடர்கள்
எக்கமெலாம் மாநிலத்தில் வாழ்வுபெற-
-அர்ச்சனையாக
வண்ணமாய் வானவரும் வாழ்த்தி நிற்க-மன்னுமைசவம்
மன்னுலகில் மாண்புடை மாதவத்தோர் [மையல்இவர
தன்னை அர்ச்செய் சேர் தமிழும் சால் போங்கப்-
-பெண்ணரசி
செய்யதிரு விழிவலம் சீர் மறை வேதவொலி
தெய்வநெறி அந்தணர்கள் சிந்தையோடு உய்யத்
திருமுறையின் பண்ணிசை சேணுழலெனி சங்கம்
பெருநெறியில் நாதம் பெருக்க கரும்பனைய
மல்லை வாத்தியத்தில் மாநிபுணர் வர்ணமெழ
பொங்கடியர் வெள்ளம் புரண்டோடி-எங்குமே
அன்னைக்(கு) அரஅரவென் றுரிய-அசைந்திவரும்
கன்னிக் கதிரவன்போற் காந்திதனி- மன்னவே
மாறை தெய மலிந்தனர் கேடமும்
ஆயைத்தடினும் அரனைச்-சாறுமென்ற
போதம் புகட்டுவாள் போலதன் கூர்த்தனம்
பேதஞ்செய் மும்மலம் பேயகில்று-கேதினியில்
தீவினைச் சங்கரித்துச் சிட்டபரி பாலனம்
தாமியற்றும் ஆற்றலைத் தாமென்று-நாமறியத்
தன்னிலை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி
பின்னமிலாள் எங்கள் பிராசோன்று-என்னி
ஏத்துமடியவர்க்கு இணைவிழிகள் காட்டி அருள்
சேர்த்திடுவாள் எங்கள் தாய்.

துர்க்காதேவி திருவருளில்
தோய்ந்து நலம் பெறும் இந்நாளில்
அனைவர்க்கும் அருள் கிடைக்கப்
பிரார்த்திக்கிறோம்.

சில்வர் ஸ்ரார்

இன்டஸ்றீஸ்

(எவர்சில்வர் பாத்திரங்கள் தயாரிப்பாளர்கள்)

தொழிற்சாலை
103, பிறவுண்வீதி,
கொக்குவில்.

காட்சிஅறை
120, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7376 தந்தி: "சில்வர் ஸ்ரார்"

சிவத்தமிழ்ச் செல்வி பண்டி...
**தங்கம்மா அப்பாக்குட்...**
(தலைவர், துர்க்காதேவி ஆலயபரிபாலன...

கத்தையும் அறிந்து அவர்கள் விரும்பியதை நிறைவேற்றி விடுகிறாள். இதற்குச் சான்றுகளாக ஆயிரமாயிரம் கதைகளை நாம் எடுத்துக்காட்டலாம். விரிவஞ்சி விடுக்கின்றேன்.

கடந்த மூன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறு கொட்டிலாக இருந்து பின்பு இவ்வூர்ப் பெரியவர்களால் கட்டி எழுப்பப்பட்டு அவ்வவர்களால் நிலங்களும் நித்திய நைமித்திய பூசைகளின் செலவுக்காக எழுதப்பட்டு இவ்வாலயம் சிறப்பாக நடைபெற்றது. ஆனால் காலஞ்செல்லச்செல்லப் பராமரிப்புக்குறைவினால் ஆலயம் இடிந்து மதிற் சுவர்களும் தூண்களும் சீர்மடைந்து காணப்பட்டன. கடைசியாக 1820ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்ட வரலாறு உண்டு. பின்பு ஆலயம் கட்டிடங்களால் பழுதடைந்தாலும் அற்புதம் குன்றவுமில்லை; நித்திய நைமித்தியங்களில் குறைவு ஏற்படவுமில்லை.

எனினும் இவ்வூர்ச் சைவ மக்கள் அனைவரும், தெல்லிப்பழை இந்து இளைஞர்களும் ஒன்றுதிரண்டு சிந்தித்ததன் பேரில் 1958ம் ஆண்டுக்குப் பின் ஆலயத் திருப்பணி தொடங்கப்பட்டு புனருத்தாரணம் செய்யப்பட்டது. அதன்பயனாகவே 1965ம் ஆண்டு ஆவணித் திருவோணத்தில் புனராவர்த்தன கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மாவைக் கந்தசுவாமி ஆதீனகர்த்தர் சிவஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் அவர்களின் பக்திசிரத்தையோடு கூடிய கும்பாபிஷேகக் கிரியையின் அற்புதத்தால் அன்று தொடக்கம் இவ்வாலயம் எழுச்சிபெறத் தொடங்கியது என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. மாவை முருகன் வருகை வருடந்தோறும் மாம்பு விழாவின்று கடந்த 150 வருடங்களாக நடைபெற்றுவருவதும் குறிப்பிடத்தக்கது.

மகோற்சவம்

1-9-68 தொடக்கம் ஆவணித் திருவோணத்தைப் பூர்த்தியாகக் கொண்ட பன்னிரண்டு நாட்களும் இவ்வாலயத்தின் மகோற்சவ காலமாகும். இக்காலத்தில் பெருந்திரளான பக்தர்கள் ஈழத்தின் பலபாகங்களில் இருந்தும் இங்கு வந்து கூடுவது வழக்கம். வெளியூர் அன்பர்களுக்கும் மற்றும் அனைவர்களுக்கும் அன்னதான ஒழுங்கு பன்னிரண்டு தினங்களும் நடைபெறும். பொருள் வளமும் அருள்வளமும் படைத்த பெருமக்கள் பலர் இவ்வன்னதானப் பணிக்கு

உற்சவமூர்த்தியை... வரச் செய்யும்... சொல்லப்படுகி...



அம்பிகை...

அம்பா...

அ...

ஆதர...

K. ஜெ...

தலைமை அ...

கஸ்டம்ஸ்...
காங்கேச...
போன்: 84...
தந்தி: "J...

"கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத் தம்மால்
ஆமளவுந் தொழுவார் எழுபாருக்கு மாதிபரே"

லக்ஷ்மிநாதன்ஸ்

பிரதான விற்பனையாளர், கொமிஷன் ஏஜண்டுகள்

தெல்லிப்பழை

லிமிடெட்

❧ குதிரைமார்க் கல்வனைஸ்ட் வாளிகள்
❧ எஸ்-லோன் பி.வி.சி. உற்பத்திப் பொருட்கள்
❧ விவசாய இரசாயனப் பொருட்கள்,
❧ பசளை வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

# ஆலய மகோற்சவ சிறப்புமலர்

## நவடியைத் தஞ்சம் புகுந்து
## மும் பெறுவோம்

உதவிவருகின்ற ...வ்வாலயத்தில் நேர ...கட்டுப்பாடுக ...வசவான நிகழ்ச்சி ...பெறுவதும் பலரா ...போற்றுதற்குரியவை ...ழ்கின்றன என்றும் ...கைலைசம் அம்பா ...குலகுடும் பெருக் ...மாக அமைந் ...என்பது எமது ...நம்பிக்கை. இவ் ...மகோற்சவத்தில் ...கிரகமாக விளங்கும் ஆண்டிலே உருவாக்கப்பட்ட சித்திரத்தேரும் அதற்கேற்ற படி அமைந்த தேர்முட்டி மண்டபமும் அடியார்களின் அன்பளிப்புகளாகவும் பெற்ற மூன்றேகால் லட்சம் ரூபா செலவில் நிறைவேற்றப்பட்டது. ஆவணி உத்தரதினத்தில் அம்பிகை புதிய சித்திரத்தேரில் பவனிவந்த சென்ற ஆண்டுக் காட்சி எமது வாழ்விலே கிடைத்தற்கரிய தொன்று என்றே கூறவேண்டும்.

இவ்வாண்டு இராசகோபுர வேலை ஆரம்பமாகி இருக்கிறது. அத்திபாரவேலைகள் நிறைவு பெற்றுவிட்டன. தமிழக ஸ்தபதி திரு. தேவலிங்கமும் குழுவினர்களும் இவ்வேலையை நிறைவேற்றித்

[8ம் பக்கம் பார்க்க]

...டிதை
...குட்டி
...லன சபை]

...த்தியையே உலா ...ய்யும் ஒழுங்கு மேற் ...ப்படுகிறது. சென்ற



...பிகையின் அருள்மிகு தோற்றம்


...ம்பாளின் கொடியேற்றத் தினமாகிய

இன்று

அவ்வாலயத் தொண்டர்களைப்

போற்றுவதோடு

எமது

...தரவாளர்களையும் வாழ்த்துகிறோம்!

ஜெயபாலசிங்கம் அன். கோ.

[பிரபல கப்பல் ஏஜன்ட்]

...மை அலுவலகம்: ...ட்ஸ் வியூ, ...கேசன்துறை. ...: 84, 800 ...: "Jeyaco"

கிளை அலுவலகம்: 160, தபாற்கந்தோர் வீதி திருகோணமலை. போன்: 391 தந்தி: "Singco"

நயினை நாகம்மையையும்
தெல்லி துர்க்காம்பிகையையும்
உள்ளத்தால் துதிக்கின்றோம்.

க. மகாலிங்கசிவம்

நயினை சிறி நாகபூசனியம்மன்
தேவஸ்தான தர்மகர்த்தா

ஆதி துர்க்கை அம்பிகையின்
அடியிணைகளே சரணம் என்றிருப்போம்
பொல்லாப்பொன்றும் வாராது.
இஸ்டம்போல் சுத்த, சைவ
போசன வகைகளை சுவைத்து மகிழ்ந்திட

கிஸ்ண பவான்

37, கே. கே. எஸ், றோட்,
யாழ்ப்பாணம்.

துர்க்கையின் திருநாமம் எங்கள் வாழ்வின்
தோத்திரங்களாக அமையட்டும்:

கிருஷ்ணாஸ்

மொத்த சில்லறை வியாபாரம்

உரிமையாளர்: பொ. கண்ணப்பர்

பிரதான வீதி - தெல்லிப்பழை.

துர்க்காதேவி ஆலயக் கொடியேற்ற தினமாகிய
இன்று எல்லோரையும்
அம்பாள் அருள்வழி நின்று
வாழ்த்துகிறோம்.

- கல்யாணப் பட்டு ஜவுளிகளுக்கு "ஜெயரூம்ஸ்"
- நவநாகரீக ஜவுளி ரசிகர்களுக்கு "ஜெயரூம்ஸ்"
- கண்கவர் ரெடிமேட் ஆடைகளுக்கு "ஜெயரூம்ஸ்"

ஜெயரூம்ஸ்

(புடவை மாளிகை)

16, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

பாடிவரும் அடியவர்க்கு
பலவினையும் போக்கிடுவாள்
நாடிவரும் அடியவர்க்கு
நல்ல வரம் தந்திடுவாள்.

ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி, சுன்னாகம்.

எங்களிடம்

அபிஷேக சந்தனம், வாசனை மிக்க பன்னீர், சந்தன வில்லைகள் மற்றும் அபிஷேக, திருமண வைபவ திரவியங்கள், ஆயுர்வேத மருந்துகள், மருந்துச்சரக்குகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தெல்லியூர் துர்க்காதேவி ஆலயத்தில்
கொடியேற்றம் நடக்கும் இந்நாளில்
எமது [redacted]
ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
அன்னையின் திருவருள் கிடைக்கப்
பிரார்த்திக்கின்றோம்.

மில்க்வைற் தொழிலகம்
யாழ்ப்பாணம்.

"மில்க்வைற்" தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு கொடுக்கும் ஆதரவாகும்.

கேட்டவரம் தந்திடுவாய்
கேதார நாயகியே
குலதேவமளித்தாள் சரணம்
சுந்தரியே சரணமம்மா
சர்க்கரையாய் முக்கனியாய்
தமிழேங்கள் மனத்தினிக்கும்
துர்க்கை மகேஸ்வரியே
சரணமம்மா சரணமம்மா.

மின்சார மேஸ்டரின் உங்கள் முன்னிலையில் உடனுக்குடன் அரைத்த சுத்தமான 'அண்ணா கோப்பியை' வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.
மற்றும் அண்ணா தயாரிப்புகளான
- அண்ணா பற்பொடி
- அண்ணா பத்தி
ஜெயந்தி பத்தி
- அண்ணா தேயிலை

ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

அண்ணா தொழிற்சாலை

இணுவில்

கிளைகள்: தொலைபேசி: 7412

இல. 4, நவீனசந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 7418

இல. 1, மத்திய சந்தை, சுன்னாகம்.

தெல்லிநகர் துர்க்கையவள்
சிந்தை மகிழ் அற்புதங்கள்
எல்லார்க்கும் செய்திடுவாள்
இறைஞ்சுவதே எங்கள் கடன்;

ஈஸ்வரி

ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர்: கே. பொன்னுத்துரை

இரும்பு, பித்தளைப், பொருட்கள்
விற்பனையாளர்.

கே. கே. எஸ். வீதி - சுன்னாகம்.

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிவுடைய
எம்மன்னை துர்க்கை கடைக்கண்ணொளியில்
கருணை காணும் நாள் இந்நாள்

வேண்டுவார்க்கு வேண்டிய எல்லாம் உண்டு

- அன்பளிப்புகள்
- பாட்டா பாதணிகள்
- வீட்டுப் பாவனைப்பொருட்கள்
- மின் உபகரணங்கள்
- இலக்ட்ரானிக்ஸ் தேவைகள்
- சைக்கிள்கள்
- கைக்கடிகாரங்கள்
- காஸ் குக்கர்கள்
- குளிர்சாதனப்பெட்டிகள்

மற்றும்

பீ. ஜீ. ஜீ. J. L. மொறிசன் சன்ஸ் அன் ஜோன்ஸ் லிமிட் யூனியன் காபைட்,
பாட்டா நிறுவனத் தயாரிப்புக்கள்
கல்கி சன்ஸ் விவசாய இரசாயனப்
பொருட்களுக்கும் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

சி. சின்னத்துரை அன்
பிறதர்

39, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 284

அகிலமதில் நோயின்மை, கல்வி,
தனம், தானியம் அனைத்தையும்
அள்ளி வழங்கிடும் அன்னை துர்க்காதேவியை
அன்புடன் இறைஞ்சுகிறோம்.

ஸ்ரீ முருகன்

ஜுவலர்ஸ்

(உரிமை: சுப்பிரமணியம் தில்லைநாதன்)
நகைவியாபாரம்-நகை அடைவு பிடித்தல்

25, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

எப்பொழுதும் நீங்கள் விரும்பும்
தங்க, வைர நகைகளை
திருப்தியுடன் பெற்றுக்கொள்வதற்கு
உகந்த இடம்.

# இந்திய எல்லையருகே சீனு அமைக்குப் நெடுஞ்சாலை

### 30,000 தொழிலாளர் ஈடுபட்டுள்ளனர்

(புதுடில்லி) இந்திய எல்லையோரமுள்ள பாகிஸ்தானிய பிரதேசத்தினூடாக புதிய நெடுஞ்சாலையொன்றினை நிர்மாணிக்க சீனு முன்வந்துள்ளது.

இந்த நெடுஞ்சாலையை நிர்மாணிக்கும் வேலையில் முப்பதினாயிரம் சீன நிர்மாணத்துறை தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நெடுஞ்சாலை, சீனுவையும் பாகிஸ்தானையும் இணைக்க இமயமலைத் தொடரினூடாக சீனு நிர்மாணிக்கும் இரண்டாவது நெடுஞ்சாலையாகும்.

இதுகுறித்து இந்திய அரசு வெளியிட்டுள்ள கண்டனக் குறிப்பில் புதிய நெடுஞ்சாலையை அமைக்க சீனு முன்வந்திருப்பது ஒரு பதற்றநிலையை உண்டாக்கியுள்ளது என்றும் இதன்மூலம் இரண்டுநாடுகளுக்குமிடையே நிலவும்நல்லுறவு பாதிக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளது.

# மத்தியகிழக்கில்

## அமெரிக்கத் திட்டங்கள்

### 'நியூயோர்க் டைம்ஸ்' அம்பலம்

நியூயோர்க் ஆக. 23 மத்திய கிழக்கு குறித்த பல வேறு ராணுவ கேந்திர முக்கியத்துவம் பெற்ற திட்டங்களை வாஷிங்டன் ஆராய்ந்து வருகிறது என்று நியூயோர்க் டைம்ஸ் எழுதியுள்ளது.

"பசுபிக்கில் தரித்துள்ள ஏழாவது கடற்படையைச் சேர்ந்த விமானந் தாங்கி கப்பல்களை காலத்துக்குக் காலம் இந்து மகா சமுத்திரத்துக்கு அனுப்புவது; அமெரிக்கா அல்லது மேற்கு ஐரோப்பாவிலிருந்து விமானப்படை யுனிட்டுகளை அனுப்புவது; சவூதி அரேபியா உட்பட பல நாடுகளுடன் கூட்டு ராணுவ ஒத்திகைகளை நடத்துவது; பிரதான மத்திய கிழக்கு நாடுகளில் ஆயுத வெடிவகைகளை சேமித்து ஆயத்தமாக வைப்பது; மத்திய கிழக்கில் அவசர நடவடிக்கைக்கு அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் படைப் பிரிவுகளை தயார் செய்வது போன்ற மத்திய கிழக்கில் அமெரிக்காவின் "ராணுவக் கேந்திர பொறுப்புகளை" நிறைவேற்ற அமெரிக்கா அதன் ஆற்றலை உருவாக்கி வருகிறது. அத்துடன், ஐரோப்பாவுக்கு அப்பாலும் நேட்டோவை செயல்பட வைப்பதும் ஒரு அம்சமாகவுள்ளது.

இத்திட்டத்துக்குப் பின்னால் எண்ணெய் விநியோகத்தை உத்தரவாதம் செய்வது முக்கிய இடம்பெறுகிறது." என்று "நியூயோர்க் டைம்ஸ்" பத்திரிகை எழுதியுள்ளது.

## "உண்மையுடன் உழைத்தவர்"

(யாழ்ப்பாணம்) "இலங்கையின் பொருளாதார நிலைக்கேற்ப இலங்கையை சரியான பாதையில் இட்டுச் சென்ற ஒரே ஒருநேர்மையான உண்மையான தர்மிஷ்டவாதி கலாநிதி என். எம். பெரேரா ஒருவரே என்பதை அவர் அரசாங்கத்துடன் இருந்த குறுகிய காலத்திலேயே நிரூபித்துக் காட்டிவிட்டார்."

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"உண்மையாக முழுமனதாக சோஷலிஸத்திற்காகவும் ஏழை மக்களுக்காகவும் உழைத்த கலாநிதி என். எம். பெரேரா நிதி அமைச்சராக இருந்த போது அவரால் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு வரவுசெலவுத் திட்டமும் பணக்காரரை மடக்கும் ஆயுதமாகவே இருந்தது. இலங்கையில் அன்று போல் என்றுமே பாட்டாளிகளும், விவசாயிகளும்தன்னிறைவுடன் வாழவில்லை என்றே கூறலாம்". (மொ)



நாவலர் அத்தியார் இந்துக் கல்லூரி ஆங்கில ஆசிரியர் திரு. க. ச. குமாரசாமி தமது 60-வது வயதில் நேற்று முதல் ஓய்வு பெற்றுள்ளார்.

ஆசிரியத்துறையில் 37 ஆண்டுகள் தன்னலமற்ற சேவையினால், நாட்டுக்கும், நம்மக்களுக்கும் சிறந்த சேவையாற்றியுள்ள இவர் தமிழ் ஆசிரியராக சேவையில் அமர்ந்து பின்னர் [illegible] மகரகம ஆங்கில பயிற்சிக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக பயிற்சிபெற்று வெளியேறினார். இவரது சேவையை கோப்பாய், மட்டுவில், வவனியா, அடம்பன் மகாவித்தியாலயங்களும் புன்னிவலை வித்தியானந்த, புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி, ஏழாலை மகாவித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆகியவையும் பெற்றுள்ளன.

சிறந்த சமூகத் தொண்டரான இவர் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் வலிகிழக்கு தலைவராகவும், நீர்வேலி பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் தனாதிகாரியாகவும், கல்லூரி கூட்டுறவு சங்கத்தின் தலைவராகவும், பல சமயநிறுவனங்களின் முக்கியஸ்தராகவும் பணிபுரிந்தார்.

-ஒரு மாணவன்

குருநகர்

## புனித ஆரோக்கியநாதர் திருநாள்

(யாழ்ப்பாணம்)

குருநகர்கடற்கரைவீதியில்கோவில்கொண்டெழுந்தருளியுள்ள புனித ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 25ம், 26ம் திகதிகளில் திருதின வழிபாடுகளுடன், 27ம் திகதி காலை 6 மணிக்கு யாழ். மேற்றிராசனப் பங்குத் தந்தை வண. பிதா. ஜே. இ. செல்வராசா அடிகளாரால் திருநாள் திருப்பலிபூஜையும், திருச்சொரூப சுற்றுப்பிரகார பவனியும் இடம்பெறும். வெளியூர் யாத்திரிகர்களின் தங்குமிட வசதிகளுக்கான ஏற்பாடுகளை யாழ் சென். ஜேம்ஸ் சனசமூக நிலையம் செய்துள்ளது.


வீடு கட்டுதல், சுவர் எழுப்புதல்,
தரை அமைத்தல்...
எதுவாயினும்
பாவியுங்கள்




இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்
தபால் பெட்டி 1382, சுதந்திர சதுக்கம், கொழும்பு- 7. தொலைபேசி: 95628. 95801-4.

நாகம்ஸ் (கன்னை)
தினசரி 4-45 7-00, 9-30
CROSS OF THE IRON

வெலிங்டன்
தினசரி 4-45, 7-00, 9-30
FRIDAY FOSTER

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30, 6-30 & 9-45.
ஒளவையார்
25-8-79 முதல் பொம்மலாட்டம்

லிடோ (யாழ் நகர்)
போன் 7698 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

REGAL (Jaffna) 3rd CROWDED WEEK
Daily 10-30, a. m. 2-00, 4-30, 7-00 p.m. only
THE OMEN
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

மனோகரா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
இன்று மட்டும். எக்காரணங்
கொண்டும் மேலும் நீடிக்கப்படமாட்டாது.
சபரிமலே ஸ்ரீ ஐயப்பன்
(கலர்)
இதுவே கடைசி சந்தர்ப்பம்.
ரம்ழான் புதிய மறு வெளியீடு
25-8-79 முதல் இருமலர்கள்

SHANTHI JAFFNA Phone: 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30
The Greatest Sea Adventure In History Has Just Begun!
RICHARD HARRIS—OMAR SHARIF in
"JUGGERNAUT"
Adventure — Suspense — Color
சாதாரணமாகச் சமுத்திரத்தில் நடமாடும் பாரிய கப்பல்களில் நடைபெறும் நாளாந்தச் சம்பவங்கள், விமானத்திலிருந்து பரசூட்டில் இறங்கும் வீரர்கள் சமுத்திரத்திலிருந்த கப்பல் சிப்பந்திகளை காப்பாற்றப்படுதல் ஆகிய சாகசங்கள் நிறைந்த படம்.
கொந்தளிக்கும் சமுத்திரத்தில் பிரமாண்டமான 'பிரிட்டானிக்' கப்பலில் நடக்கும் சம்பவங்களை குழு குழு வர்ணத்தில் உங்கள் முழுக் குடும்பத்துடனும் பார்த்து மகிழுங்கள்.
27-8-79 "MR. RICCO" Scope - Color Action-Packed Movie

ராணி (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி-தேவிகா
ஸ்ரீதரின்
சுமைதாங்கி
(புதிய பிரதி)

ராஜா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
எம் ஜி. ஆர்.-ஜெயலலிதா-நாகேஷ் நடித்த
அன்னமிட்டகை
(புதிய பிரதி)

3-வது வெற்றி வாரம்
SRIDHAR-Jaffna ஸ்ரீதர்
at 10-30 a m, 3-00 & 7-30 p m
CECIL B DEMILLE'S
பிரமாண்டமான வெளியீடு!
TEN COMMANDMENTS
பத்துக் கட்டளைகள்
(புதிய டெக்னிக் கலர்—ஆங்கிலம்)
Color
Starring: Two Great Stars
CHARLTON HESTON — YUL BRYNNER

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 8ம் திகதி
வெள்ளிக்கிழமை
[24-8-1979]

மேடம்: இன்று முன்னணியில் நிற்பீர்கள். நல்ல தீர்ப்பு வழங்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கை மேலோங்கும். குறிக்கோளில் வெற்றி கிடைக்கும். இலட்சியவாதிகளுக்கு இன்றுபொன்னான தினம்.

இடபம்: தொழில் பகுதியில் புதியவாய்ப்புக்கள் கிடைக்கலாம். எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்பிதழ் கிடைப்பதற்கான சந்தர்ப்பமுண்டு. சிலருக்குத் திடீர் இரைபங்களுக்கும் இடமேற்படமுடியும்.

மிதுனம்: புதிய கோணத்திலிருந்து பொருள்வரவுக்கு இடமுண்டு; துணிவையே துணையெனக்கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள். பொதுசனத்தலைமையுடன் புகழும் தேடிவரும்.

கடகம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு. உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம்.

சிங்கம்: மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும். இளய சகோதரத்தின் உடல் நலமும் பாதிக்கப்படலாம். அபாயகரமான காரியங்களைத் தவிர்த்துக்கொள்ளவும்.

கன்னி: பொருளீட்டும் துறையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். அயலவர்களின் அன்பு உங்களை பரவசப்படுத்தும். குடும்ப வாழ்க்கையில் சமரசம் நிலவும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் பெரும் மதிப்புக் கொடுப்பர்.

துலாம்: உடல்நலம் சிறிது பாதிக்கப்படும். வைத்திய வழிகளில் பணம் செலவாகும். சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு. எண்ணிய கருமத்தில் தடை ஏற்படும். ஓய்வு விரும்பத்தக்கது.

விருட்சம்: அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும். செய்காரியங்களில் தனிப்புகழ் பரவும். முயற்சியால் முன்னேற்றத்திற்கு இடமுண்டு. கல்விப்பணி செல்வாக்கை வளர்க்கும்.

தனு: மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும். நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள். கணவன் மனைவி உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும்.

மகரம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை தேடிக்கொள்வீர்கள். அரசபயத்துக்கு இடமேற்படுமாகையால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும். அமைதி நன்று.

கும்பம்: சுற்றமும் போற்றும் இனிக்கும் வாழ்க்கை. காதல் விவகாரங்களுக்கு இடமுண்டு. களஸ்திரவழியின்மூலமும் தனம் சேரக்கூடும்.

மீனம்: தொல்லைகள் அலைமோதும் மனநிம்மதியைத் தேடி அலைவீர்கள். குடும்பத்தில் சிறு பிணிக்கு இடமேற்படலாம். வைத்தியச்செலவுகளுக்காகப் பணம் விரயமாகலாம். நண்பர்களை நம்பவேண்டாம மதுபானத்தைத் தவிர்க்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலே க. வேலுப்பிள்ளை

RIO (Jaffna-TownHall)
Phone: 7607
2ND
CAR CRASH WEEK
Daily 4 Shows
DRIVER

# அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்யப்படும்

(கொழும்பு)

சில அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத் தாபனங்கள், உள்ளூராட்சி சபைகள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியன வழங்கும் சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம் செய்வதற்கான சட்டமூலத்திற்கு அமைச்சரவை நேற்றுமுன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தச் சட்டமூலத்திற்கமைய குறிப்பிடப்பட்ட அமைச்சர்களின் சிபாரிசுகளுடன் இந்த நிறுவனங்களில் சேவைபுரியும் எந்தவொரு பிரிவையும் அத்தியாவசிய சேவைகளாக ஜனாதிபதியால் பிரகடனம்செய்யமுடியும்.

உணவுப்பொருட்கள், குடிவகைகள், பெற்றோலியப் பொருட்கள், வாயுநீர் ஆகியவற்றின் விநியோகம், பொதுப் போக்குவரத்து, தபால்தந்திச் சேவை ஆகியன இச்சட்டமூலத்தில் அத்தியாவசிய சேவைகளாக அடங்குகின்றன.

இச்சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்திறைல் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(கெ-கு)

## பெரியபுராண விரிவுரை

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வடக்கு தம்பகிட்டி மாயக்கை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளன.

5ம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும். 6-ந் திகதி வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். உற்சவ தினங்களில் தினமும் மாலை 8-15 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பெரியபுராண விரிவுரை நிகழ்த்துவார். (சா-கு)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் நாவலர் வீதி 182/2-ம் இலக்கத்து அம்பலவாணர் சின்னத்துரையின் மரணச்சொத்து விடயத்தில்

இறந்தவர்

அம்பலவாணர் செல்லையா, வேலணை கிழக்கு, வேலணை.

மனுதாரர்

இல. தத்துவவழக்கு/3473

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேற்குறிப்பிட்ட நீதிமன்றத்தில் இறந்தவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆக்ஷேபனையுள்ள ஆள் எவரேனும் இருப்பின் 1979-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9-ந் திகதி முற்பகல் 9 மணிக்கு முன்னர் இந்த நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுமுடிவாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 16-ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

3370

ரம்ழான் வெளியீடு!
வின்ஸர் 25-8-79 முதல் தினசரி 4 காட்சிகள்
யாழ்ப்பாணம் காலை 10-30, பி.ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30
(தென்னிந்திய நடிகர்) (கோமாளிகள் புகழ்)
எஸ்.வி.சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ்
உதயகுமார் நடித்த
மாமியார் வீடு
கதை-வசனம்-டைரக்ஷன் கே. வெங்கட்
இன்று மட்டும் றிவோல்வர் ரீட்டா

## முஸ்லிம்...

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஏற்படுத்தியுள்ளது. யாழ் மாநகரசபை உறுப்பினர் ஜனாப் பாஷா முஹிதீன் பிச்சையின் வேண்டுகோளை அடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இன்றும் நாளையும் சகல பகுதிகளிலும் வாகனங்களில் குப்பை அகற்றப்படும். இன்று நுளம்புமருந்து விசப்படும்.

நாளை சகல பள்ளிகளிலும் மலசலகூடங்கள் ஜெமிநாசினி கொண்டு சுத்திகரிக்கப்படுவதுடன் அதிகாலை 5 மணி முதல் 7 மணி வரை குடிநீர் விநியோகம் நடைபெறும்.

சகல பள்ளிகளின் முன்பாக சக்திகூடிய மின்விளக்குகள் பொருத்தப்படும்.

[கொ-கு]

## அன்னையின்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தர ஒப்புக்கொண்டுள்ளனர். 63 அடி உயரமான அமைப்பில் நிருமாணிக்கப்படும் இவ் விராசகோபுர வேலை 1981ம் ஆண்டுத் தொடக்கத்தில் நிறைவுறும் என்று அம்பாள் அருளை இறைஞ்சி எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் இவ்வாலயத்தில் ஒருசில திருப்பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. அவற்றையும் துர்க்கை அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

1. தீர்த்தக்கேணி
2. நுழைவாயில்
3. ஓம்காரநாதம் நிறைந்த ஆலய மணி

இவற்றில் முதலாவது திருப்பணியை ஏற்றுக்கொள்ள அன்பர் ஒருவர் முன்வந்துள்ளார். ஏனைய இரு திருப்பணிகளையும் தனித்தனி ஏற்றுக்கொள்ள விரும்புவோர் நிர்வாகசபையினருக்கு முன்னமே தெரிவித்து அதனை ஏற்று அம்பாள் அருளைப் பெற்றுக்கொள்ளலாம்.

அன்பர்கள் நினைத்தவற்றை எல்லாம் நிறைவேற்றும் தயாபரியாக அன்னை துர்க்கை காட்சி தருகிறாள். கன்னியர்க்குத் திருமண வாழ்வும் காளையர்க்கு நல்ல தொழில்வாய்ப்பும் மாணவர்க்கும் பரீட்சையில் சித்தியும் வயோதிபர்க்கு வாழ்வில் அமைதியும், தொண்டர்களுக்குப் பணிவான உள்ளமும் வறியவர்களுக்கு வயிற்றுக்கு உணவும் செல்வர்களுக்குக் கொடுக்கும் மனமும் நிரம்பக் கொடுப்பவள் அன்னை துர்க்கை. எம் பெருமாட்டியை வணங்குவோர் அன்னையைப் பல்வேறுவகைப்பட்ட நிலையில் கண்டு போற்றுவர். வெற்றியை விரும்புவோர் கொற்றவையாகவும் கல்வியை விரும்புவோர் கலைமகளாகவும் செல்வத்தை வேண்டுவோர் திருமகளாகவும் பசிப்பிணியுடையோர் அன்னபூரணியாகவும் திருமணத்தை நோக்குவோர் காமாட்சியாகவும்பசை, பிணியுடையோர் மகாமாரியாகவும் அன்னையைக் கண்டு தரிசித்து வழிபடும் முறை இங்கு உண்டு. அத்தனைகோலத்திலும் துர்க்கை அடியவர்கள் இன்று அருள்பெறுகிறார்கள். இவ்வருட் பெருக்கம் ஈழத்தின் வடகோடியில் அமைந்த தெல்லிப்பழையில் உள்ள தெற்கு யாழ்ப்பாணம் குடாநாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பாய்ந்து ஈழத்தின் பல பாகங்களிலும் செறிந்து இன்று சைவஉலகையே தனித்துக் கொண்டிருக்கிறது. எனவே எல்லோரும் அன்னையின் திருவடி நிழலிலே தஞ்சம் புகுந்து அமைதியும் ஆனந்தமுமடைவோமாக.

●

இவ்வாண்டு பெண்கள் தொண்டர்சபையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது இவர்களும் விசேட விழாக்காலங்களில் இயங்கி பணிபுரிகின்றனர். இவ்வாலயச் சார்பிலே எதிர்காலத்தில் குருமார் பயிற்சி நிலையமொன்றும் ஞாயிறு பாடசாலை ஒன்றும் நடாத்தப்பட வேண்டுமென்ற ஆலோசனையைப் பலர் தெரிவிக்கின்றனர். தேவியின் திருவருளால் இது கைகூடும் என்பது திண்ணம்.

## நவீன மார்க்கட்:

# இன்று புதிய கட்டட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுமார் 18 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் புதிய கட்டட திறப்புவிழா இன்று மாலை நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாண நகர முதல்வர் திரு. ஆர். விசுவநாதன் நவீன மார்க்கட் புதிய கட்டடத்தை இன்று மாலை திறந்துவைப்பார்.

நவீன மார்க்கட் கடைகள் கொண்டருக்கு வழங்கப்பட்டதன்மூலம் சபைக்கு சுமார் 24 லட்சம் ரூபா கிடைத்துள்ளது. கட்டட செலவு 18 லட்சம் போக, 6 லட்சமும் சபைக்கு மேலதிக வருமானமாக கிடைத்துள்ளது.

மேல் மாடியில் இரு மண்டபங்களும், நடுத்தர மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபங்கள் இன்னும் எவருக்கும் வழங்கப்படவில்லை.

நவீன மார்க்கட் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை முன்னாள் மேயர் அமரர் அல்பிரட் துரையப்பா 75ம் ஆண்டு, ஜூலை மாதம், 4ம் தேதி நாட்டினார். [ஏ]

# மருதனுமடம் கிறிஸ்த சேவா ஆச்சிரம 40வது ஆண்டுவிழா

[சுன்னாகம்]

"பெரியண்ணன் சேவக் எஸ். செல்வரத்தினத்தின் சொந்தவாழ்க்கையும் ஆச்சிரம வாழ்க்கையும் ஒன்றிணைந்தவை. 1939ம் ஆண்டு ஆவணி மாதம் 20ந் திகதி பற்றைகளும், பாம்புகளும் நிறைந்திருந்த இந்தக் காணியில் ஆச்சிரமம் அமைக்கப்பட்ட பொழுது இது இவ்வளவு தூரம் வளர்ச்சியடையுமென்று யாருமே நம்பவில்லை. பெரியண்ணனின் மன உறுதியினாலும் தெய்வ அனுக்கிரகத்தினாலும் இது இன்று பாரிய வளர்ச்சியடைந்துள்ளது"

இவ்வாறு யாழ்ப்பாண திருச்சபையின் முன்னாள் பேராயர் பேரருள் திரு. எஸ். குலேந்திரன் அடிகளார் மருதனுமடம் கிறிஸ்தசேவா ஆச்சிரமத்தின் 40 வது ஆண்டு நிறைவு விழா வைபவத்தில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் நாற்பது என்ற இலக்கம் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கிறது. நாற்பது நாட்கள் இரவும் பகலும் தொடர்ந்து பெய்த பெருமழையிலும், வெள்ளப்பெருக்கிலும் இருந்து கடவுள் அடியானாகிய 'நோவா' பேழை மூலம் காப்பாற்றப்பட்டான். நாற்பது நாட்கள் உபவாசம் இருந்த கிறிஸ்து பசாசினால் சோதிக்கப்பட்டார் என்றார்.

பெரியண்ணன் சேவக் எஸ். செல்வரத்தினத்தின் வாழ்க்கை வரலாறு கொண்ட நூலை திரு. எட்வேட் அறிமுகம் செய்து வைத்தார். முதலாவது பிரதியை ஆச்சிரமத் தலைவர் சேமக் சாம். அல்பிரட் அடிகளார் பெற்றுக்கொண்டார்.

காலை நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் ஆராதனையில் பரந்தன் நவஜீவன அதிபர் அருட்திரு. தம்பிராசா அடிகளார் அருளுரை நிகழ்த்தினார். இவ்விழாவில் பெருந்தொகை யானோர் கலந்துகொண்டனர். [அ]

## தட்டுவன்கொட்டி கொலை வழக்கு:

# எதிரிக்கு 5 வருட ஒத்திவைப்புச் சிறை

(யாழ்ப்பாணம்)

தட்டுவன் கொட்டி கொலை வழக்கில் எதிரிக்கு 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 1000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் இவ்விசாரணை நடைபெற்றது.


இவ்வழக்கில் 1977 பெப்ரவரி 12ம் தேதி தட்டுவன்கொட்டியில், நல்லதம்பி பாலசிங்கத்தை கொலை செய்ததாக க. சுப்பிரமணியம் என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி சி. நாகராசா, சட்டத்தரணி செல்வி ஆர். ராஜரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா வழக்கை நடத்தினார்.

எதிரி விசாரணை ஆரம்பத்தில் கைமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

நீதிபதி எதிரிக்கு 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத் தண்டனையும், 1000 ரூபா அபராதமும் விதித்து, அபராதத்தைத் தவணை முறையில் கட்டும்படியும் தீர்ப்பளித்தார். [ச]



அமரா

## முனியப்பதாசன்

ஒவ்வொரு மனிதனும் ஏதாவது சிந்தித்துக்கொண்டேயிருக்கிறான். சிந்தியாத மனிதரே இல்லை, தான் சிந்தித்தவற்றை எழுத்திலே வடிக்கிறவனைத்தான் எழுத்தாளன் என்கின்றோம்.

ஆனால்—

எழுதுகிறவர்களெல்லாருமே எழுத்தாளர்கள்தாமா? எழுத்தாளர்களா 'மிதக்கிறவர்கள்' வெகு சிலரே. அந்த வெகுசிலரில் மிக முக்கியமானவர் 'முனியப்பதாசன்' அமரது இயற்பெயர் சண்முகநாதன். தாமோதரம்பிள்ளை என்ற ஒரு பண்பாளரின் மைந்தனாக சண்முகநாதன் 1943ம் ஆண்டில் பிறந்து, 'மகன் தந்தைக்காற்றும் கடன் இவன் தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்' என்ற குறள் வாக்கைத்தான் பேறுவினால் நிலைநிறுத்தி, 25-7-79ல் இறையடி சேர்ந்தார். மிகக் குறுகிய காலமே வாழ்ந்து ஐம்பதுக்கும் உட்பட்ட சிறுகதைகளின் மூலம் முனியப்பதாசன் புகழேணியின் உச்சியை அடையும் தறுவாயில் விதி வேறுவிதமாக 'விளையாடிவிட்டது.'

கொழும்பு இலங்கை வைத்தியக் கல்லூரி அப்போதிகரி- பாமசிஸ்ற் இந்த மாணவர் சங்கத்தின் 'கலைவாணி' நாலாவது வருட நிறைவு விழா மலரில் இடம் பெற்ற 'அம்மா' என்ற முனியப்பதாசனின் சிறுகதைக்கு, அவரைப்பற்றி மலரில் குறிப்பிடப்பட்டிருந்த சிறுகுறிப்பு வருமாறு

"இலங்கையர்கோன் சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசைப் பெற்றுக்கொண்டு இலங்கையின் இலக்கிய உலகில் புகுந்த இவர், மிகக் குறுகிய காலத்தில் நிலையான விதானத்தைப் பெற்றுக்கொண்டார் லா. ச. ரா, பிச்சமூர்த்தி மௌனி போன்ற சிறந்த இந்திய எழுத்தாளர்களின் கதைகளில் காணப்படுகின்ற மன ஓட்டங்களையும் தத்துவப்பார்வைகளையும் இவரும் சிறுகதைகளில் பார்க்கின்றோம்."

மேற்கூறப்பட்ட எழுத்தாளர்களின் படைப்புகளில் ஈடுபாடு உடையவர்கள் முனியப்பதாசனை இனங்கண்டுகொள்வார்கள்.

முனியப்பதாசனின் அந்தியேட்டி வைபவம் இந்தக் கல்லூரி ஒழுங்கையிலுள்ள அன்னாரது இல்லத்தில் இன்று நடைபெறுகிறது. அவரது ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திப்போம்.

...சபா

## விநாயகர் சதுர்த்தி

[யாழ்ப்பாணம்]

கந்தர்மடம் பழம்றோட் ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை காலை பத்துமணிக்கும் பிற்பகல் இரண்டு மணிக்கும் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று விநாயகப்பெருமான் மாலை 4-30 மணிக்கு வெளிவீதிவலம் வருவார்.

## இசை நிகழ்ச்சி

[யாழ்ப்பாண ]

அகாபே போர்ஸின் 'மை பிறதர்ஸ் கீப்பர்' அளிக்கும் விசேட இசை நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [கு]


மக்கினொன் டிரவல் சேவிஸ் (இலங்கை) லிமிட்டெட்

Mackinnon Travel Service (Ceylon) Ltd

தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது:

இங்கு
- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- சுற்றுலாக்கள்
- பாஸ்போட்
- விசா

இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்கு செய்துகொள்ளலாம்.
உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!



நாளைக்கு
சனி 25-8-79
மாலை 6-00 மணிக்கு

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
நீங்கள் ஓர் மகத்தான
அனுபவத்தைப் பெற உங்களுக்கு
அன்பான அழைப்பு

இலவச இசை விருந்து
அனைவரும் அவசியம் கேட்டு அனுபவிக்கவேண்டும்.
• This is an agape force
Presentation of "MY BROTHERS KEEPER" IN CONCERT"


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49, Telegeram Eelanadu T.Phone 389.